
புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • செப்டம்பர் 16 2025 • புரட்சி 25 • முழக்கம் 38 • விலை ரூ.6.00

## விருது வழங்கும் விழாவில் கொளத்தூர் மணி விளக்கம்

# ‘குடிஅரசு’ தொகுப்பில் கழகம் சந்தித்த தடைகள்!

**குடிஅரசு தொகுப்புகளை வெளியிட்ட பதிப்பாசிரியர் கொளத்தூர் மணிக்கு சிறந்த பதிப்பாளர் விருதை சீர் வாசகர் வட்டம் வழங்கியது. விருது ஏற்பு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை;**

எனக்கு குடிஅரசு நூல் பதிப்புக்காக இந்த விருதை அளித்திருக்கிறார்கள். அதனால் அதைப் பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும். பெரியாரின் உதவியாளராக இருந்த புலவர் இமயவரம்பன் அவர்களின் முயற்சியில் தோழர்களால் திரட்டப்பட்டு அப்போது வரை இருந்த குடிஅரசு இதழ்களை படி எடுத்து (ஜெராக்ஸ்) கையால் எழுதி திருச்சி பெரியார் மாளிகையில் பிரதியெடுத்தார்கள். இரண்டு ஆண்டுகள் இந்த பணிகள் நடைபெற்றன. பெரியார் மாளிகையில் புலவர் இமயவரம்பன் அவர்கள் அதற்கென்று தேக்கு மரத்தால் செய்யப்பட்ட தனி அலமாரியில் ஆண்டு வாரியாக தனித்தனி ட்ராயரில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

என்னை பெரியார் திடலில் 1993-94ல் சந்தித்த போது சொன்னார். “ 25 கிலோ நாப்த்தாலின் குண்டுகளை வாங்கி குடிஅரசு இதழ் அலமாரியில் வைத்து பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்; இன்னும் வெளியிடவில்லை என்றாலும் பத்து ஆண்டுகள் அவை பத்திரமாக இருக்கும்” என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். எனக்கு அவர் பேசியதே மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியது. குடிஅரசு தொகுப்புகளை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இதிலிருந்து தொடங்கியது என்று கூறலாம்.

சுயமரியாதை இயக்கம் பற்றிய சிறப்புகளை பல பேர் பகிர்ந்து இருக்கிறார்கள். ஒரு செய்தியை பெரியார் எப்படி தனித்துவமாகப் பார்த்தார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.




பெரியார் கடவுள் மறுப்பாளர்தான். பல கடவுள் மறுப்பாளர்களை பார்த்திருக்கிறோம். இந்துத்துவா கொள்கையை உருவாக்கிய சாவர்க்கரே ஒரு கடவுள் மறுப்பாளர்தான். ஆனால் அவர் இந்த நாட்டுக்கு கேடான தத்துவத்தை உருவாக்கியவர்.

ஆனால் பெரியாரின் கடவுள் மறுப்பு அது அல்ல! ஜாதி ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட கடவுள் மறுப்பு. வேத சாஸ்திர ஒழிப்பு, அதற்குக் காரணமாக இருக்கிற பார்ப்பனிய எதிர்ப்போடு கூடிய எல்லாவற்றையும் இணைத்து ஜாதி ஒழிப்பை நோக்கமாகக் கொண்டதே பெரியார் பேசிய கடவுள் மறுப்பு. சமூகத்திற்கான கடவுள் மறுப்பு தான் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கை. அப்படித்தான் அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பலரும் பெண் உரிமை என்று பேசிக் கொண்டிருந்த காலத்தில் பெரியார் பெண் விடுதலையைப் பேசினார். 1926 முதல் 1931 வரை வந்த கட்டுரைகளின் தொகுப்பு தான் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற நூல். அந்த காலகட்டத்தில் அந்த கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார். நாம் விரும்புகிற சமுதாயத்தைப் பற்றிய சிந்தனைகளை மக்களிடம் எடுத்து உரைத்து விட்டுப் போக வேண்டும் என்று நான் கருதுகிறேன் என்று பெரியார் சொல்கிறார்.

1972ல் கம்யூனிசம் என்ற தலைப்பில் ஒரு பொதுக்கூட்டம் திருச்சி உறையூரில் நடந்தது. அதில் பெரியார் உரையாற்றி இருக்கிறார் இறப்பதற்கு இரண்டு மாதம் முன்னால் அக்டோபர் மாதம் சமதர்மம் என்ற பெயரில் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். பொதுவுடமை உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று எழுதினார். தன்னுடைய திராவிடர் கழகக் கொடி வடிவமைப்பில் கூட கருப்புக் கொடியில் சிவப்பு வட்டம் மெல்ல விரிந்து அது சிவப்பாக வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

ஆனால் சமதர்மம், சமூக மாற்றம் இல்லாமல் வரமுடியாது என்பது அவரது கருத்து. ஒரு இடத்தில் வேடிக்கையாகச் சொன்னார். சதி செய்வதற்கென்றே ஒரு ஜாதி இல்லாத ரஷ்யாவில் லெலின் வெற்றி பெற்று விட்டார். ஆனால் இந்தியாவில் அப்படி செய்ய முடியாது என்பதைப்போல அவர் தனது ஒவ்வொரு கருத்தையும் பதிவு செய்திருக்கிறார். அவர் பேசிய திருமண முறையாகட்டும்; உடையை பற்றிய கருத்து ஆகட்டும்; யூனிசெக்ஸ் இரு பாலாருக்கும் ஒரே மாதிரியான உடை; பொது சமையலறை போன்ற பல கருத்துக்களை பெரியார் பேசியிருக்கிறார். 1938 வரை திசைவிலகல் இல்லாது சுயமரியாதை பரப்புரையை மட்டுமே செய்து கொண்டிருந்தவர் தான், 1938 இறுதியில் நீதிக்கட்சி தலைவராகவும் ஆக நேர்ந்தது.

குடிஅரசு தொகுப்புப் பணிகள் குறித்து சில செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் 1949-ம் ஆண்டு வரை குடிஅரசு இதழை தட்டச்சு செய்து வைத்திருந்தோம். ஆனால் வெளியிடுவதற்கான சிக்கலைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கும் போது எவ்வளவு செலவாகும் என்று கணக்கிட்டோம். அப்போது தோழர் விடுதலை இராசேந்திரன் சொன்னார் வங்கிக் கடன் வாங்க வேண்டும் என்றால் என்னுடைய வீட்டை அடமானம் வைத்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார். 1 கோடி அளவுக்கு செலவாகும் என்று சொன்னார்கள்.

முதலில் 1938 வரை குடிஅரசு இதழை வெளியிடுவோம் என்ற முடிவுக்கு வந்தோம். தட்டச்சு செய்து வைத்திருந்தது 1949 வரை. 1938 வரை குடிஅரசு இதழை தொகுப்பாக வெளியிட்டோம். அதற்கு வந்த சட்ட சிக்கலை எல்லோரும் அறிவீர்கள்.

நாங்கள் வெளியீட்டு விழாவை அறிவித்த உடனே நீதிமன்றம் சென்று திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி தடைகோரினார். அதற்குப் பிறகு ‘விடுதலை’ நாளேட்டில் ஒரு விளம்பரம் வெளியிட்டார்கள். தங்களிடம் இல்லாத குடிஅரசு இதழ்களை பட்டியல் போட்டு, பாதுகாத்து வைத்திருப்பவர்கள் அனுப்புமாறு கேட்டார்கள். பெரியாரின் அறிவு சொத்துக்கு உரிமைக்கோரியவர்கள், அந்த அறிவுச் சொத்துக்களை காப்பாற்றி வைக்கவில்லை. இதைத் தான் அவர்கள் வெளியிட்ட விளம்பரம் வெளிப்படுத்தியது.

குடிஅரசு தொகுதிகளை ஒவ்வொரு ஆண்டாகவே முதலில் வெளியிட்டோம். சேலத்தில் 2003 ஆம் ஆண்டு நடந்த தமிழர் வழிபாட்டு உரிமை மாநாட்டில் 1925 ஆம் ஆண்டுக்கான தொகுதியை வெளியிட்டோம். பேராசிரியர் நன்னன் வெளியிட முதல் நூலினை தஞ்சை மருதவாணன் பெற்றுக் கொண்டார். திருச்சி பெரியார் மாளிகையில் நடந்த நூல் தொகுப்பு குழுவில் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டவர் தோழர் மருதவாணன்.

பிறகு 1926, 1927-ம் ஆண்டுக்கான இரண்டாவது மூன்றாவது தொகுதிகளில் தான் நாங்கள் திரட்டி வைத்திருந்த முக்கியமான செய்திகளை எல்லாம் சேர்த்து வெளியிட்டோம். அதில் ஒரு தொகுதியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச்செயலாளராக இருந்த டி.எம் ராஜா வெளியிட்டார். மற்றொரு தொகுதியை தோழர் நல்லகண்ணு வெளியிட்டார். இப்படி ஒவ்வொன்றாக குடிஅரசு தொகுப்பு வெளிவந்தது.

இப்படி ஒவ்வொன்றாக வெளியிட்ட போது தான் நாங்கள் பேசிக் கொண்டோம், நம்முடைய காலத்தில் கூட குடி அரசு இதழை முழுமையாக வெளியிட முடியாதோ என்று பேசி வந்தோம். இவை அனைத்தையும் ஒரே சமயத்தில் கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியை தொடங்கினோம். பின்னர் 1938 வரை குடிஅரசு இதழ் தொகுப்பு வெளியிடப்பட்டது.

வெளியிட்டதற்கு தடைக்கோரி சுயமரியாதை இயக்க சார்பில் அதன் தலைவர் கி.வீரமணி நடத்திய வழக்கில் நமக்காக வாதாடியவர் வழக்கறிஞர் துரைசாமி. தடை நீக்க வழக்கில் அவரது பங்கு மகத்தானது.

வழக்கை விசாரித்த உயர்நிதிமன்ற நீதிபதி சந்துரு இந்த தொகுப்புக்கு தடை விதிக்க முடியாது என்று தீர்ப்பளித்தார். பிறகு வழக்கை மேல் முறையீடு செய்தார்கள். இரு நீதிபதிகள் அடங்கிய கலீஃப்புல்லா மற்றும் கிருபாகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு நீதிபதி சந்துருவின் தீர்ப்பை உறுதி செய்தது. பிறகு சுயமரியாதை இயக்கம் சார்பில் கீ.வீரமணி உச்சநீதிமன்றம் போனார். அவர்கள் தங்களது சார்பில் பிரபல வழக்கறிஞர் கே.கே. வேணுகோபால் அவர்களை நியமித்தனர். நம்மால் பெரும் பொருட்செலவு செய்து உச்சநீதிமன்றதில் வழக்கறிஞர் வைத்து வாதாட முடியவில்லை.

தொடர்ச்சி 2-ம் பக்கம்

## ஆதரவுக்கரம் நீட்டிய உச்சநீதிமன்ற வழக்கறிஞர்

இந்த நிலையில் தானாக வழக்குக்காக ஒரு உச்சநீதிமன்ற வழக்கறிஞர் வாதாடுவதற்கு முன்வந்தார். அவரது பெயர் பசப்பா பிரபு பட்டீல். இவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த சிவராஜ் பட்டீல் அவர்களின் மகன். உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பட்டீல் மருமகன். ஒரு நாள் அவரே திடீரென்று தொடர்பு கொண்டு இந்த வழக்கில் வாதாடுவதற்கான நல்ல வாய்ப்பை நீங்கள் வழங்குவீர்களா என்று கேட்டார். (shall you give me the previlege of appearing in this case). எதிர்பாராமல் கிடைத்த இந்த ஆதரவு எங்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தந்தது.

பிரபல வழக்கறிஞர் கே.கே வேணுகோபால் இந்த வழக்கில் மனுதாரருக்கு ஆதரவாக வாதாடப் போகும் செய்தி அவருக்கு தெரிந்தது. தனது ஜூனியரிடம் இது குறித்து விசாரித்துள்ளார். உடனே அந்த ஜூனியர் நம் வழக்கறிஞர்களான பாரிவேந்தன், பிரபு ஆகியோரிடம் கேட்டு விபரங்களைத் தெரிந்து அவரிடம் தெரிவித்துள்ளார். அதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளை முறையாக படித்துவிட்டு அதற்குப் பிறகுதான் என்னிடம் அவர் பேசி இருக்கிறார். மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு வழக்கு ஆவணங்களை அனுப்பி வைக்கட்டுமா? என்று கேட்டபோது தேவையில்லை உயர்நீதிமன்ற தீர்ப்புகளை நான் முழுமையாக படித்து விட்டேன் என்று கூறியதோடு வணிக நோக்கத்தில் நீங்கள் இதை வெளியிடவில்லை. பெரியார் கருத்துக்களை மக்களிடம் சேர்க்க வேண்டும் என்பதற்காகவே இலவசமாக பதிவிறக்கம் செய்யும் வகையில் இணையதளத்தில் வெளியிட்டுள்ளீர்கள். வழக்கிற்கு இது ஒன்றே போதும் என்று கூறியுள்ளார். நீதிபதிகள் முன்பு இந்த வாதத்தை மட்டுமே அவர் முன்வைத்தார். உடனே நீதிபதிகள் இதை ஏற்றுக்கொண்டு இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது என்று நிராகரித்து விட்டனர். அதே நேரத்தில் வெளியீட்டு உரிமை பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்துக்கு மட்டுமே உண்டு என்ற முதன்மை வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. 15 இலட்சம் ரூபாய் இழப்பீடு கேட்டார்கள், விசாரணை நடக்கும் போது ஒரு கட்டத்தில் அவர்களே பின்வாங்கிக் கொண்டார்கள் என்பது வேறு.

தலையங்கம்

# ஜாதி எதிர்ப்பை இயக்கமாக்குவோம்

“மனிதம் நமது அடையாளம்! ஜாதி அவமானம்! எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்” என்ற முழக்கத்தை முன்வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ச்சியாக ஜாதி எதிர்ப்புப் பரப்புரை இயக்கத்தை நடத்தி வருகிறது. பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 முதல் நினைவு நாளான டிசம்பர் 24 வரை இப்பரப்புரை இயக்கத்தை இடைவிடாது தொடர்ந்து முன்னெடுக்க திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழு முடிவு எடுத்துள்ளது. ஜாதி ஒழிப்பு என்ற நோக்கத்துக்காகவே தொடங்கப்பட்டது தான் பெரியார் இயக்கம். சுயமரியாதை இயக்கத்தின் ஒரு நூற்றாண்டு கால பயணத்தில் இறுகிப் போய்க் கிடந்த ஜாதிக் கட்டமைப்பை அது அசைத்து இருக்கிறது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இன்னும் கடக்க வேண்டிய தூரம் வெகுதொலைவில் இருக்கிறது.

காலம் எவ்வளவோ மாறிவிட்டது, இப்போது எல்லாம் யார் ஜாதி பார்க்கிறார்கள்? என்று பொது வெளிகளில் பேசிக்கொண்டே சொந்த ஜாதிக்குள் வரன் தேடும் அமைப்புகளில் பதிவு செய்து வருகிறார்கள்.

நகர்மயமாவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. பெண் கல்வி மற்றும் விளிம்பு நிலை சமூகத்தின் உயர்கல்வி விகிதங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. இதன் காரணமாக ஜாதி கடந்த திருமணங்கள் அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. ஆனாலும் இளைஞர்களின் வாழ்க்கைத் துணைதேடும் உரிமையை ஜாதிய சமூகம் மறுக்கிறது. குறிப்பாக இதில் ஏதேனும் ஒருவர் தலித் என்றால் கலவரங்களிலும் சமூக ஒதுக்குதலிலும் ஆணவப் படுகொலைகளிலும் அது முடிவடைகிறது.

கிராமங்கள் ஜாதிக் கட்டமைப்பிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. மதங்கள் சமூகத்தை ஜாதியாக கூறுபோட்ட நிலையில், இப்போது கோயில்களும் ஜாதி அடிப்படையில் மக்களை பாகுபடுத்துகின்றன. கிராமங்களில் போலி ஜாதிப் பெருமையில் மூழ்கிப்போய் தனது சுயஅவலங்களை எண்ணிப் பார்க்காமல் தனக்கும் கீழான ஜாதி என்ற வெறுப்பில் மூழ்கிக் கிடக்கிறது ஒருகூட்டம், தங்களுக்காக தனிக் கோயிலை கட்டுகிறார்கள். அந்த கோயிலுக்குள் தனக்குக் கீழான ஜாதியினர் என்று கூறி அனுமதிக்க மறுக்கிறார்கள். அம்மன், காளி, திரௌபதி கடவுள்கள் ஜாதியாக பிரிக்கப்பட்டுவிட்டன. கோயில் தேர் என்றாலும் சாமி உற்சவம் என்றாலும் சேரிக்குள் வர மறுக்கின்றன. பல கிராமங்களில் கோயில் விழாக்களுக்கு பட்டியல் இனப்பிரிவினரிடமிருந்து நன்கொடை பெறவே மறுக்கிறார்கள். ரிசர்வ் வங்கி அச்சிடும் ரூபாய் நோட்டுகள் கூட தலித் மக்களிடம் இருந்தால் அது தீண்டாமைக்குள்ளாகி விடுகிறது.

தீண்டப்படாத ஜாதியில் பிறந்த ஒருவன் கிராமத்தில் தேநீர்க் கடைகளை திறக்க முடியாது. அவர்கள் வாழும் பகுதிக்குள் மட்டும் வேண்டுமானால் திறக்கலாம். முடி வெட்டுவதற்குக் கூட நகரப் பகுதிகளுக்கு போக வேண்டும். இறந்த உடல்களை சுமந்து செல்லும் இறுதி ஊர்வலம் கூட ஜாதி இந்துக்கள் தெருவழியாக செல்வதற்கு தடை செய்யப்படுகிறது. ஒற்றையடிப் பாதையிலும், ஆறு, குளங்களை கடந்தும் பிணங்களை தூக்கி சுமக்கும் அவலக் காட்சிகளை பார்க்க முடிகிறது. இவையெல்லாம் இயல்பான சமூக நிகழ்வுகளாகவே ஜாதி சமூகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அவமானத்தில் வலியையும், சுமையையும் தாங்கிக் கொண்டிருக்கிறவர்களால் மட்டுமே இந்தப் பாதிப்பை உணர முடியும்.

கடும் தண்டனை தரக்கூடிய வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள் அமலில் இருக்கின்றன. வழக்குகள் பதிவாகின்றன, வெகு சில வழக்குகளில் மட்டுமே தண்டனைகள் கிடைக்கின்றன. சட்டத்தை உயிர்த் துடிப்போடு ஏன் செயல்படுத்த முடியவில்லை?

சமூகத்தில் மன மாற்றம் வரவில்லை என்பதுதான் இதற்கான பதில். மன மாற்றத்தை உருவாக்குவதற்கு ஜாதி இழிவு குறித்த புரிதலை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். தமிழ்நாட்டில் ஏராளமான அரசியல் கட்சிகள் வரிசைகட்டி நிற்கின்றன. அந்த கட்சிகளுக்கான வாக்குவங்கி அரசியல், ஜாதி கட்டமைப்பின் மீது தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே இந்த கட்சிகள் ஜாதிகள் வேண்டாம் என்றோ, ஜாதிகளை விடுங்கள் என்றோ வாய்த்திறக்கத் தயாராக இல்லை.

ஜாதி ஆணவப்படுகொலை நடக்கும்போது சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக அதை பார்க்கிறார்களே தவிர, அதற்கு காரணமான ஜாதிவெறியைக் கண்டிக்க மறுக்கிறார்கள். ஜாதி எதிர்ப்பு பேசும் சில தலித் அமைப்புகள் கூட சுயஜாதி பற்றுடன் செயல்படுவதை பார்க்க முடிகிறது. இந்த அரசியல் சமூக சூழ்நிலையில்தான் திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை இயக்கத்தை தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்கிறது. சுயஜாதி மறுப்போடு ஜாதி எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதே அந்தப் போராட்டத்தை அர்த்தமுள்ளதாக்கும். திராவிடர் விடுதலைக் கழகம் இந்தப் பார்வையோடுதான் ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை நடத்துகிறது.

பொது சமூகத்தின் உளவியலுக்கு எதிராக நடத்தும் கருத்தியல் போராட்டம் இது. இந்த போராட்டத்தை வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும் சக்தி இளைய சமுதாயத்தினருக்கு மட்டுமே உண்டு என்ற நோக்கத்தோடு “எங்கள் தலைமுறைக்கு ஜாதிவேண்டாம்” என்ற முழக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் முன்வைக்கிறது. பொது ஊடகங்கள் இந்த இயக்கத்தை இருட்டடிப்பு செய்தாலும், இளைஞர்கள் நடத்தும் வலையொலிகள் இந்த பரப்புரைக் கருத்துக்களை மக்களிடம் மிக வேகமாக கொண்டு சேர்ப்பது மிகுந்த நம்பிக்கையை தருகிறது. பெரியாரிய சிந்தனையாளர்கள் என பல இளைஞர்கள் நடத்தும் வலையொளிகளில் இந்த கருத்துரைகளை ஒளிப்பரப்பு செய்து வருகிறார்கள்.

திராவிடர் விடுதலைக் கழகம் ஒரு அமைப்பாக ஜாதி எதிர்ப்பை இயக்கமாகியுள்ளது. எனவே அமைப்பைக் கடந்து ஏராளமான இளைஞர்கள் களப்பணிகளில் கரம்கோர்த்து நிற்கின்றனர்.

ஜாதி ஒழியட்டும்! ஜாதி ஒழிக, ஜாதி அவமானம் என்ற நமது முழக்கங்கள் இயக்கமாக ஓங்கி ஒலிக்கட்டும்!

# ஜாதிவெறிக்குப் பலியான இமானுவேல் சேகரன்

ஜாதி ஒழிப்புக்காக களப்பலியான இமானுவேல் சேகரன் அவர்களின் நினைவு நாளில் தமிழ்நாடு அரசு அவருக்கு சிலை எழுப்ப இருக்கிறது என அறிவித்துள்ளதைப் பாராட்டி வரவேற்போம்.

* ராணுவத்தில் தான் வகித்த பதவியை உதறி எறிந்து விட்டு மதுரை ராமநாதபுரம் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் ஆதிக்க ஜாதியினர் கட்டவிழ்த்து விட்ட ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடியவர் இம்மானுவேல்.

* தீண்டப்படாத பட்டியலில் இருந்த பள்ளர் சமூகத்தினருக்கு ஆதிக்க ஜாதியினர் 11 அடிமைக் கட்டளைகளை திணித்திருந்தனர்.

* கிராமம் கிராமமாக மிதி வண்டிகளில் சென்று அந்த கட்டளைகளை மீறுவதற்கு அழைத்து சுயமரியாதை உணர்வை ஊட்டினார்.

* கோயில் விழாக்களில் திணிக்கப்பட்ட அடிமைச் சேவகங்களையும் தேநீர் கடைகளில் இருந்த இரட்டைக் குவளைகளையும் எதிர்த்துப் போராடினார்.

* ஆதிக்க ஜாதி எதிர்ப்பு என்ற எல்லையோடு நின்று விடாமல் ஜாதி எதிர்ப்பையும் பெண்ணுரிமையையும் பேசியவர்.

* அன்று தீண்டாமை பட்டியலில் இருந்த அருந்ததியினரையும் நாடார் சமூக மக்களையும் நட்பு சக்தியாக இணைத்துக் கொண்டவர்.

* சுய ஜாதியை எதிர்த்து அருந்ததியினருக்கு குரல் கொடுத்தவர்.

* தேநீர்க் கடைகளில் இரட்டைக் குவளைகளை உடைத்து போராட்டம் நடத்தியதோடு 1954 இல் அருப்புக்கோட்டையில் இரட்டைக் குவளை எதிர்ப்பு மாநாட்டை நடத்தியவர்.

* முத்துராமலிங்கதேவர் தலைமையிலான பார்வர்ட் பிளாக் கட்சி திணித்த ஜாதி ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதற்காக காமராசர் தலைமையில் காங்கிரஸில் இணைந்தார்.

* ராஜாஜியின் குலக்கல்வி திட்டத்திற்கு எதிராக பெரியார் குரல் கொடுத்த போது ,போராட்டத்திற்கு ஆதரவாக கையெழுத்து இயக்கம் நடத்தியவர் இமானுவேல் சேகரன்.

* பார்வர்ட் பிளாக் தலைவர் முத்துராமலிங்க தேவர் நடத்திய ஜாதி ஆதிக்க அரசியலுக்கு சவாலாக வந்தார்.

* 1957-ல் நடந்த முதுகுளத்தூர் சட்டமன்ற இடைத்தேர்தலில் முத்துராமலிங்கதேவரால் நிறுத்தப்பட்ட வேட்பாளர் தோல்வியைத் தழுவி, இமானுவேல் சேகரன் ஆதரவு பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஆதிக்க ஜாதியினர் கலவரத்தில் இறங்கினார்கள்.

* முதுகுளத்தூரில் கலவரத்தை அடக்க மாவட்ட ஆட்சித் தலைவர் கூட்டிய சமாதானக் கூட்டத்தில் முத்துராமலிங்க தேவருக்கும் இமானுவேல் சேகரனுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடந்தது.

* சமாதான ஒப்பந்தத்தில் இமானுவேல் சேகருக்கு இணையாக தான் கையெழுத்திட முடியாது என்று முதலில் மறுத்த முத்துராமலிங்க தேவர், கடும் அழுத்தத்திற்கு பிறகு கையெழுத்திட முன்வந்தார்.

கலவரத்திற்கு இதுவே காரணம் என்று சட்டமன்றத்தில் அமைச்சர் பக்தவச்சலம் சமர்ப்பித்த அறிக்கை கூறியது.

* அடுத்த நாளே செப்டம்பர் 11ஆம் தேதி அன்று இமானுவேல் சேகரன் ஜாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார். அப்போது அம்மாவீரனின் வயது 32.

* முதுகுளத்தூர் கலவரம் தமிழ்நாடு முழுதும் அரசியல் புயலை கிளப்பியது. அப்போது இமானுவேல் சேகரனுக்கு ஆதரவாக குரல் கொடுத்த ஒரே தலைவர் பெரியார் மட்டுமே.

* கலவரத்தை அடக்காவிட்டால் நானே களம் இறங்குவேன் என்று அறிவித்தார் பெரியார்.

* தொடர்ந்து 1957-ல் பெரியார் சட்ட எரிப்பு போராட்டத்தை நடத்துவதற்கு இந்த முதுகுளத்தூர் கலவரமே காரணமாக அமைந்தது.

* ஜாதி வெறியர்களுக்கு எதிராகவும் இம்மானுவேல் சேகரன் போராட்டத்திற்கு ஆதரவாகவும் தொடர்ந்து ‘விடுதலை’ செய்திகளைவெளியிட்டது.

* பேராசிரியர் சொக்கலிங்கம் மற்றும் பத்திரிக்கையாளர் தினகரன் ஆகியோர் இந்தப் போராட்டம் குறித்து எழுதிய நூல்களில் பெரியாரின் ஒரே ஆதரவுக் குரலையும் விடுதலை வெளியிட்ட ஆதரவு செய்திகளையும் ஆவணங்களாக பதிவு செய்துள்ளனர்.

* ஜாதி ஒழிப்புப் போராட்ட களத்திற்கு உணர்வூட்டிக் கொண்டிருக்கும் மாவீரன் இமானுவேல் சேகருக்கு வீரவணக்கம் செலுத்தி போராட்டத்தை முன்னெடுக்க உறுதி ஏற்போம்.

**– விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**
*12.09.2025*

முதல் பக்க தொடர்ச்சி..

அப்போது அச்சடித்து வைத்த புத்தகங்களை பாதுகாப்பது எங்களுக்கு பெரும் சுமையாக இருந்தது. அப்போது திராவிடர் கழகம் திமுகவுடன் ஆதரவு நிலைப்பாட்டில் இருந்தது. பறிமுதல் செய்வார்களோ என்ற அச்சம் இருந்தது. அச்சடித்து, தொகுப்புகளை பாதுகாக்க இடங்களை மாறி மாறி தேட வேண்டியிருந்தது. ஒரு திருமண மண்டபத்தில் வைத்திருந்தோம், வேறு ஒரு இடத்திற்கு அதை மாற்றினோம். அந்த வீட்டில் இறப்பு நேர்ந்துவிட்டது. உடனே வேறு இடத்திற்கு மாற்றினோம். இப்படியே இரண்டு ஆண்டுகள் இந்த குடிஅரசு தொகுப்பை நாங்கள் பாதுகாத்து வந்தோம்.

இந்த விருது எனக்கு மட்டுமல்ல என்னோடு உழைத்த அத்தனை தோழர்களுக்கும் போய் சேர்ந்ததாக கருதவேண்டும். இந்த பணியில் தோழர்களின் பங்கு அளப்பரியது. கழகத் தோழர்களின் குடும்பமே பங்கேற்றது. அவர்களிடமிருந்து தான் ஒவ்வொரு நாளும் சுழல் வரிசையில் எங்களுக்கு உணவு வரும். தோழர்களின் துணைவியார்களே பிழை திருத்தும் பணியில் ஈடுபட்டார்கள்.

(தொடரும்)

# திடீர் நிகழ்வுகளுக்குக் கடவுள் காரணமா?

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை-15

**கேள்வி: நாம் நினைத்துப் பார்க்காத ஓர் நொடிக்குள் எல்லாம் நடந்து போகிறது. அப்படியாயின், நம்மை மீறிய ஒரு சக்தி இருக்கிறது என்றுதானே பொருள்? அதனை உங்களால் நிராகரிக்க முடியுமா?**

**பதில்:** *அப்படி ஓர் நொடிக்குள் நடந்து முடிவதாக நாம் கருதுகிறோம். ஆனால் அது மெய்யல்ல.*

*“பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெயின்"*

**-என்பார் வள்ளுவர்.**

*மென்மையான மயிலிறகுதான் என்றாலும், ஏற்றியுள்ள வண்டி, அம்மயிலிறகையே அளவுக்கு மிகுதியாக ஏற்றினால் அச்சு முறிந்து கெடும். அளவு மாறும் போதும் குணம் மாறுகிறது. ஆம் மயிலிறகை ஏற்றிக்கொண்டே இருக்கிறீர்கள். ஆயினும் ஒரு கட்டத்தில்தான் அச்சு முறிகிறது. இதன் பொருள், அந்தக் கணத்தில் ஏற்றப்பட்ட ஒற்றை மயிலிறகின் பாரம் தாங்காமலா அச்சு முறிந்தது. இல்லை மயிலிறகு ஏற ஏற அச்சு இற்றுக்கொண்டே வந்தது. ஒரு கட்டத்தில் அதன் தாங்கும் சக்தி தகர, அச்சு முறிகிறது. அளவு மாற்றத்தால் ஏற்பட்டது குணமாற்றம். அந்த நொடியில், பாய்ச்சல் வேகத்தில் முடிந்துவிட்டது.*

*அளவு மாற்றம், குணமாற்றம் மற்றும் பாய்ச்சல் வேக மாற்றம் என்பது மார்க்சிய இயங்கியல் தத்துவத்தில் அடிப்படையான நான்காவது விதியாகும்.*

*நீரைக் கொதிக்க வைத்தால் 99 டிகிரி வரை சூடேறும், 100 டிகிரியில் கொதிக்கும். அதுபோல் குளிர்வித்தால் 0 டிகிரிக்கு போகும்போது பனிக்கட்டியாக மாறும். ஆக, அளவு மாற மாற குணம் மாறிக்கொண்டே வந்து ஒரு கட்டத்தில் முந்தைய நிலையை மறுத்து அடுத்த நிலைக்கு பாய்ச்சல் வேகத்தில் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது.*

**நிலச்சரிவு, பூகம்பம் என தீடீர் நிகழ்வுகள் ஏன் ஏற்படுகின்றன? கடவுள் சோதனையா? இந்த கேள்விக்கும், பரிணாம வளர்ச்சியைக் கண்டறிந்த டார்வின் இறை நம்பிக்கையாளரா? என்ற கேள்விக்கும் அறிவியல் அடிப்படையிலான விடை.**

*இந்தப் பூமிப்பந்தில் பெருவெள்ளமும் இயற்கைப் பேரழிவும் ஆதிமுதலே அவ்வப்போதைக்கு நடந்து வந்தது. இந்த பெருவெள்ளம் அப்போதிருந்த வேடர்களின் நாகரீகத்தை அழித்தது. அதிலிருந்து தப்பிப் பிழைத்து வந்தவர்கள் குகைகளில் வாழ்ந்து தங்கள் வாழ்க்கை முறையைப் பூரணமாக மாற்றிக் கொண்டார்கள் என்பதைச் சுட்டும் ஜார்ஜ் பொலிட்ஸர், "ஆக, நில இயல் வகைப்பட்ட ஒரு பேரழிவின் விளைவாக பூமியும் நாகரிகமும் திடீரென மாறுதல் அடைந்தது என்கிறார்.*

*இது போல் வரலாற்றில் சில திடீர் திருப்பங்கள், புரட்சிகள் நிகழ்ந்ததுண்டு. இவற்றை சில வரலாற்றாசிரியர்கள் "தற்செயல் நிகழச்சி’ என வருணிப்பர். இது சரியல்ல. ஏனெனில் ‘நடத்திருக்க வேண்டாதது எப்படியோ நடந்துவிட்டது என்கிறபோதே அது தற்செயல் நிகழ்வாகும்: ஆனால் சமூகத்தில் நடந்த புரட்சிகள் எதுவும் அப்படிப்பட்டதல்ல. அவசியத் தேவையாக ஏற்பட்டவையே ஏனெனில், தொடர்ச்சியாக மாறுதல் நிகழந்த வண்ணமே உள்ளன; அவை கூட்டாகச் சேர்ந்து திடீர் மாறுதல்களில் போய் முடிகின்றன என்பதே மெய்.*

*ஆம், சொந்த வாழ்வும் அப்படித்தான். பூப்பெய்தல் என்று கூறப்படும் இயற்கையான நிகழ்வு உங்கள் மகளுக்கோ தங்கைக்கோ இன்று காலை அல்லது மதியம் திடீரென ஏற்பட்டிருக்கலாம்: அதற்கான மாறுதல் சில மாதங்களாக அவர் உடலில் ஏற்பட்டுவந்தது. என்பதே மெய். அதன் அளவு மாற்றம் குணமாற்றமாகி திடீரென நிகழ்ந்தது அவ்வளவே. ஒருவருக்கு திடீரென வேலை இழப்பு ஏற்பட்டது. அவர் சுற்றிலும் நடப்பதை அறியாதவராக இருந்தால் ஏதோ தனக்கு கிரகம் சரியில்லாததால் திடீரென வேலை பறிபோய் விட்டது எனக் கருதுவர். உண்மை என்ன? நாட்டில் நிலவிய பொருளாதார மந்தமும் தொழில் தேக்கமும் பல மாதமாக உருவாக்கிவந்த நெருக்கடியின் கோரவிளைவால் நூற்றுக்கணக்கானோர் வேலை இழந்து வந்தனர் அதன் ஒரு அம்சமே இவரின் வேலை இழப்பும் என்பதே உண்மை.*

*ஆக. திடீர் நிகழ்வுகள் எதுவாயினும், அதனை சற்று ஊடுருவிப்பார்த்தால் அது தானாய் விளங்கும். எந்த வகையிலும் அது கடவுளின் திருவிளையாடல் அல்ல.*

**கேள்வி: டார்வின் பரிணாம தத்துவத்தைச் சொன்னாலும் கிறித்துவத்தை நம்பினார் என்பது மெய்யல்லவா?**

**பதில்:** *அப்படித்தான் நம்பப்பட்டு வந்தது; சொல்லப்பட்டு வந்தது அதே சமயம் அன்றைய மத ஆதிக்கச் சூழலில் புருனோ எரிக்கப்பட்ட சூழலில், கோப்பர் நிகஸ் கடும் சவாலை சந்தித்த வேளையில், தன் கருத்தை முன்னெடுத்துச் செல்ல கிறித்துவத்தை நம்புவதாக ஒரு நாடகத்தை அவர் தந்திரமாக மேற்கொண்டிருக்கலாம் என்றும் கருதப்பட்டு வந்தது. ஏனெனில், உலகில் பல நாடுகளில் அப்படித்தான் நடந்தன. இந்தியாவிலும் மிகச்சிறந்த வானியல் நிபுணர்களாகத் திகழ்ந்த பூமியின் வடிவம் உருண்டை என்பதையும் சூரியனே மையமானது என்பதையும் கண்டு சொன்ன ஆரியபட்டரும், வராகமித்திரரும் கூட அவற்றை எழுதும் போது சில மதநம்பிக்கை சார்ந்த சுலோகங்களோடு கலந்தே தர வேண்டியிருந்தது.*

*டார்வின் விவகாரத்தில் உண்மை வெளிப்பட்டு, நாம் கருதியது சரிதான் என நிரூபணமாகியுள்ளது. அண்மையில் வெளிவந்த செய்தி இது:*

*"பரிணாம உயிரியல்வாதக் கோட்பாட்டை உருவாக்கிய இயற்கை அறிவியல்வாதி சார்லஸ் டார்வின், தான் ஒரு நாத்திகன் என்று எழுதிய கடிதம் ஏலம் விடப்படுகிறது.இந்தக் கடிதம் நியூயார்க்கில் ஏலத்தில் சுமார் 90,000 டாலர்களைப் பெற்றுத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது."*

*இளம் பாரிஸ்டர் பிரான்சிஸ் மெக்டர்மட் 1880ம் ஆண்டு நவம்பர் 23ம் தேதி டார்வினுக்கு எழுதிய கடிதத்தில், "உங்கள் நூல்களை வாசிப்பது எனக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்றாலும், பைபிள் மீது நான் நம்பிக்கை இழந்து விடவில்லை. இருப்பினும், நான் உங்களுக்கு இதனை எழுதும் காரணம் என்னவெனில், உங்களுக்கு பைபிள் மீது நம்பிக்கை இருக்கிறதா? ஆம் அல்லது இல்லை என்ற பதில் எனக்கு போதுமானது’ என்று எழுதியிருந்தார்.*

*இதற்குப் பதில் கடிதம் எழுதிய டார்வின், “பைபிள் ஒரு இறைவெளிப்பாடு என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை ஏசு கிறிஸ்து கடவுளின் புதல்வன் என்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை” என்று எழுதினார்.*

*டார்வினுக்கு மெக்டர்மட் இந்த கடிதம் வெளியிடப்பட மாட்டாது என்று வாக்குறுதி அளித்திருந்தார். இதனால் 100 ஆண்டுகளுக்கும் மேலாக இது வெளிவரவில்லை.*

**ஆதாரம்: சு.பொ. அகத்தியலிங்கம் எழுதிய ஆன்மீகமா? அறிவியலா? நூலிலுருந்து.**

# அடக்குமுறைகளை எதிர்கொண்ட போராளி கொளத்தூர் மணி

**-பேராசிரியர் வீ.அரசு**

***ஈரோட்டில் செப்-7 அன்று சீர்வாசகர் வட்டம் சார்பில் நிகழ்ந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு விருது வழங்கும் விழாவில் பேராசிரியர் வீ.அரசு ஆற்றிய உரை; கடந்த இதழின் தொடர்ச்சி...***

*ஏறக்குறைய 1983 தொடக்கம் முதல் 2009 வரை உருவான ஈழப் போராட்டம் தமிழ்ச் சமூகத்தில் மிக முக்கியமான போராட்டம். அதில் தோழர் மணி அவர்களுடைய பங்களிப்பு பற்றி நிறைய பேருக்கு தெரியும். இந்தத் தொகுப்பில் ஒரு முன்னுரை மாதிரி எழுதி இருக்கிறார்கள். அதில் கடைசி வரி இப்படி முடிகிறது, ”காவல் அதிகாரி எழுதி இருக்கிற ஒரு அறிக்கையில் இப்படி குறிப்பிட்டு இருக்கிறார். இந்த மணி தனது சொந்தப் பணத்தைக் கொண்டு ஈழ விடுதலைப் போராளிகளுக்கு உதவி செய்து வருகிறார்” என்று அந்த அதிகாரி எழுதி இருக்கிறார். ‘இன்ட்ரஸ்டிங்’ ஆன செய்தி.*

*எனக்கு தனிப்பட்ட முறையில் ஈழத்தில் பல நண்பர்கள் உண்டு, அவர்களுடனான வாழ்க்கை அனுபவங்களும் உண்டு. அப்போதெல்லாம் தோழர் மணி செய்த தியாகங்களை அவர்கள் என்னிடம் பேசி இருக்கிறார்கள். மணி நடத்திய பயிற்சிப் பட்டறைகள், தனது நிலத்தில் அவர் நடத்திய போராளிகளுக்கான பயிற்சி போன்ற பல வரலாறுகள் உண்டு. போராளிகளுக்கான பயிற்சிப் பட்டறை தஞ்சாவூரில் சில இடங்களில் நடந்தது. பிராபகரன் அழைப்பை ஏற்று அவர் ஈழத்திற்கு சென்று திரும்பி வந்தது என்பதும் ஒரு மிக முக்கியமான வரலாறு.*

*2000-க்குப் பிறகு அவர் திராவிடர் கழகத்திலிருந்து அவர் அனுப்பப்படுகிறார். அது எந்த ஒரு அமைப்பிலும் தீவிரமாக நேர்மையாக வேலை செய்யக்கூடிய ஒரு மனிதர் இருந்தால் அந்த அமைப்பில் சுற்றி இருப்பவர்கள் அவரைத் தொடரவிட மாட்டார்கள். அது போன்ற வரலாற்றை எல்லாம் சந்தித்தவர்களில் நானும் ஒருவன். நாம் பேசுற பொழுது இவன் கருப்பு சட்டை போடுகிறான் என்பார்கள்; இவன் கருப்பு சட்டைக்காரன் இவன் எப்படி கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்க முடியும்பா... இப்படி நிறைய ஜோக் இருக்கின்றது.*
*நண்பர்களே வீரப்பன் பிரச்சனையில் அவரது பங்களிப்பு மிகமுக்கியமானது. அது ஒரு அட்வென்சரி ஸ்டோரி இல்ல அது மாறாக கர்நாடகத்தில் வாழும் தமிழர்களுக்கான வாழ்க்கையோடு தொடர்புடையது. அந்த மலைப்பகுதியில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையோடு தொடர்புடையது. வீரப்பன் அவருடைய நிலங்களை பறித்தார்கள், சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள். நூற்றுக்கணக்கான பழங்குடி மக்களை சிறையில் அடைத்தார்கள்.*

*அந்த காலங்களில் தோழர் மணி அனுபவித்த சிறைக் கொடுமைகளும் அவர் எங்கே இருக்கிறார்? அவரை உயிரோடு விடுவார்களா விடமாட்டார்களா? என்ற பதட்டமான சூழல்; அவருடைய மகள் இந்த ஆவணப்படத்தில் அதை கொஞ்சம் சொன்னார். தடா, பொடா என்று கொடுஞ்சட்டங்களையும் சந்தித்தார். பல ஆண்டுகள் சிறையில் இருந்துள்ளார். சார்ந்திருக்கக்கூடிய வீரப்பன் பகுதியைச் சார்ந்த மக்களுக்கான ஒரு உரிமைப் போராளியாக எப்படி செயல்பட்டிருக்கிறார். அது ஒரு ஊடகத்தில் ஒரு மிக மோசமான அட்வென்சர் கதையாக மாற்றப்பட்டிருந்தனால் அதற்குள் இருந்த மக்களுடைய வாழ்க்கை கொடுமைகள்; அவை சார்ந்த செய்திகள் தெளிவாக எழுதப்படவில்லை. காவல் அதிகாரி மிரட்டல்களை நேரடியாக எதிர்கொண்டதை இந்த ஆவணப்படத்தில் தோழர்கள் கூறினார்கள். ஆனால் அவருடைய வாழ்க்கையின் மீது எந்த விமர்சனத்தையும் வைக்க முடியாது. அந்த வகையில் 1966 தொடக்கம் இன்றுவரை நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு மிகப்பெரிய சமூகப் போராளி இந்த தமிழ்ச் சமூகத்தை புரிந்து கொண்டவர். பெரியார், அம்பேத்கர் கருத்துக்களை நடைமுறைப்படுத்த விரும்புபவர். இதைச் சார்ந்த ஒரு பெரும் தொண்டர் கூட்டத்தோடு வாழக்கூடிய தோழர் மணி அவர்களுக்கு இந்த சீர் வழங்கிய இந்த விருதை சீர் பெற்ற பெருமையாக நான் கருதுகிறேன். என்றார் போரசிரியர் வீ.அரசு.*

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## சேலம் மாவட்டக் கழகத் தோழர்களின் தொடர் முயற்சியால் தமிழில் பெயர்ப்பலகை!









சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதிக்குட்பட்ட ஸ்ரீராஜஸ்தானி உணவகத்தின் பெயர் பலகைகளில் தமிழ்நாட்டு அரசாணைப்படி தமிழில் பெயர்ப் பலகை வைக்க வலியுறுத்தி கழகத்தின் சார்பில் ஓமலூர் காவல் நிலையத்தில் கடந்த 01.08.2025 அன்று புகார் மனு கொடுக்கப்பட்டிருந்தது.

புகாரைப் பெற்றுக்கொண்டு (18.08.2025) வரை போதிய மாற்றங்கள் ஏதும் செய்யாத நிலையில், மீண்டும் 19.08.2025 அன்று இரண்டாவது புகார் மனு அளிக்கபட்டிருந்தது. அந்த புகார் மனுவில் செப்டம்பர் 05.09.2025 தேதிக்குள் அந்த பெயர் பலகையை நடவடிக்கை எடுத்து மாற்றாத பட்சத்தில் தமிழ்நாடு அரசின் ஆணையை நிறைவேற்றும் எண்ணத்தோடு நாங்களே அந்த பலகையை அழிக்க வேண்டி இருக்கும் என்பதை புகார் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

அதனடிப்படையில் அந்த உணவகத்தின் பெயர் பலகைகளில் இந்தி மற்றும் ஆங்கிலம் மட்டுமே இடம்பெற்றிருந்த நிலையில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் புகார் மனு எதிரொலியால் தமிழ் சேர்க்கப்பட்டுள்ளது.

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

● கவிஞர் ரம்யாதங்கம் அவர்களின் “புதுமையில் புதைந்த புதையல்கள்” கவிதை நூல் வெளியீட்டு விழா 17.08.2025 அன்று காலை 9 மணி அளவில் லட்சுமி திருமண மண்டபம் கொளத்தூரில் நடைபெற்றது.

தலைவர் மேட்டூர் தமிழ் சங்கம் ஆசிரியர் கு. பாரி, சமூக ஆர்வலர் மற்றும் திரைப்பட தயாரிப்பாளர் K. P. N. மகேஷ்வர், செயலர் இந்திய பல் மருத்துவச் சங்கம் மேட்டூர் கிளை மருத்துவர் மோ. சிவசுப்பிரமணியன், அஞ்சல் துறை (ஓய்வு) சஞ்சீவி, பொருளாளர் மேட்டூர் கிளை நூலக வாசகர் வட்டம் எழுத்தாளர் மே. கா. கிட்டு ஆகியோர் நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர்.

கழகத் தலைவர் நிகழ்ச்சியில் தலைமையேற்று “புதுமையில் புதைந்த புதையல்கள்” கவிதை நூலை வெளியிட்டார். பழனியப்பா சில்க்ஸ் PEP சந்திரசேகரன் அவர்கள் நூலை பெற்றுக் கொண்டார்.

திருப்பூர் மாவட்டம் கா. ஜோதி மற்றும் உதவி பேராசிரியர் கற்பகம் பொறியியல் கல்லூரி கோவை வி.ஜெயபிரகாஷ் இந்நூலை பற்றி உரையாற்றினர்.

● கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், மாரண்டபள்ளி பகுதியைச் சார்ந்த குட்டியப்பன் - செல்வி இணையரின் மகள் கு. கீர்த்தனா அவர்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்டம், பைபூர் ஊராட்சி, கீழ்பைபூர் பகுதியைச் சார்ந்த வே. கருட்டையன்- அ. இலட்சுமி இணையரின் மகன் சு. உதயன் அவர்களுக்கும் வாழ்க்கைத் துணைநல ஏற்பு விழா (29.08.2025) காலை கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிபட்டினம் கே.ஆர். வி திருமண மஹாலில் நடைபெற்றது. மரணத் தண்டனை ஒழிப்புப் போராளி, அற்புதம் குயில்தாசன் தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் பேரறிவாளன் வரவேற்புரையாற்றினார். (பெரியார் திருவள்ளுவர் மானுட ஒன்றிய நிறுவனர்) குயில்தாசன் முன்னிலை வகித்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கு. கீர்த்தனா- சு. உதயன் ஆகியோரின் வாழ்க்கைத் துணைநல ஏற்பு விழா நடத்தி வைத்து கருத்துரையாற்றி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

● தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தாலுக்கா, தேப்பெருமாநல்லூர் பெரியார் நகர் பகுதியைச் சேர்ந்த M. மகாலிங்கம் -M. சந்திரா ஆகியோரின் மகன் காஸ்ட்ரோ அவர்களுக்கும், திருவாரூர் மாவட்டம், புலிவலம், வெங்கடேசவபுரம் பகுதியைச் சார்ந்த R. சரவணன்- S. சாந்தி அவர்களின் மகள் ச. காவியா ஆகியோரின் சுயமரியாதை திருமணம் 28.08.2025 அன்று காலை டிஜெஎஸ் மஹால் கும்பகோணத்தில் நடைபெற்றது.

மாத்தூர் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திராவிட முன்னேற்ற கழகம் செந்தில் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கோவை கு. ராமகிருஷ்ணன் (பொதுச் செயலாளர் தபெதிக) கருத்துரையாற்றி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

ராஜ்முகமது (ம.ம.க மா.செ.உ), சு. விஜயகுமார் (தி.க), ரா. சாத்தையன் (மக்கள் உரிமை கூட்டணி), கோயம்புத்தூர் கலையரசன் (விசிக) கோயம்புத்தூர் குடந்தை விஜய் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தோழர்கள் சோலை மாரியப்பன் (தஞ்சாவூர் மாவட்ட துணைத் தலைவர்), சா. வெங்கடேசன் (குடந்தை ஒன்றிய அமைப்பாளர்) மற்றும் பலர் கலந்து கொண்டு இணையர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# ஈழத்தில் பொதுவாக்கெடுப்பு கோரி புதுவையில் கருத்தரங்கம்

புதுச்சேரி மாநிலம், அரியாங்குப்பம் தங்கவேல் பாஞ்சாலி அரங்கத்தில் 30.08.2025 மாலை 6 மணி அளவில் தமிழீழ மக்களுக்கான தீர்வு வாக்கெடுப்பு என்ற தலைப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், பேராசிரியர். சரசுவதி தலைமையில் நடைபெற்றது.

அ.ச.தீனா(புதுச்சேரி பெரியார் சிந்தனையாளர் இயக்கம்) வரவேற்புரையாற்றினார். பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் விடுதலைக்கு மரணம் இல்லை, புலிகளுக்கு தோல்வி இல்லை என்ற பாடலை பாடினார்.

மக்கள் வழக்கறிஞர் ப.பா மோகன், ருத்திரகுமார் (நாடாளுமன்ற உறுப்பினர்,நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்) ஆகியோர் காணொளி வாயிலாக கருத்துரையாற்றினார்கள்.

இரா. மங்கையர் செல்வன் (தமிழ் மீனவர் விடுதலை வேங்கைகள் நிறுவனத் தலைவர்), நாடாளுமன்ற உறுப்பினர், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தோழர்கள் வழக்குரைஞர் கோ. பாவேந்தன், கார்த்திக் கணேசன், வீர. மோகன்(தபெதிக தலைவர்), மா. ஏகாம்பரம் (புதுச்சேரி பழங்குடியினர் விடுதலை இயக்கத் தலைவர்), சி. சு. சுவாமிநாதன் (புதுச்சேரி மாணவர் கூட்டமைப்பு தலைவர்), பி. பிரகாஷ் ( புதுச்சேரி தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர்), கி. மகேந்திரன் (புதுச்சேரி புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி செயலாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழீழ மக்கள் இலங்கை அரசாங்கத்தால் உடல் அளவிலும் மனதளவிலும் பாதிக்கப்பட்ட பிரச்சினைகளை பற்றி பேசினார். தமிழீழ மக்களின் உரிமைக்காக தமிழின மக்களுக்கான தீர்வு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் அவர் அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருந்து வாக்கு செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கையாக முன் வைத்து கருத்துரையாற்றினார்.




நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், பேராசிரியர் சரசுவதி அவர்கள் தமிழீழ மக்களுக்கான உரிமைகளுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் செயலாற்றி வருவதை பற்றியும் தமிழீழ மக்களுக்கான தீர்வு பொதுவாக்கெடுப்பு பற்றியும் இறுதியாக கருத்துரையாற்றினார். இந்தக் கருத்தரங்கில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

> இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்பால் தங்கள் வாழ்வுரிமையை இழந்து நிற்கும் தமிழின மக்களுக்கு தீர்வு கிடைக்க பாதிப்புக்கு உள்ளான தமிழீழ பகுதியிலும், புலம்பெயர் தமிழர்கள் வாழும் பகுதியிலும் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்திட வேண்டும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கூறுகின்றது.
>
> இந்த கோரிக்கையை தொப்புள் கொடி உறவுகளான தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ்நாடு, புதுச்சேரி சட்டமன்றங்களில் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்றும், தமிழ்நாடு, புதுச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முன் முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்த கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முகேஷ் தங்கவேலு நன்றியுரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சிற்பி ராஜன், இரா,உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), ப.அருண் (சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), இளையரசன் (விழுப்புரம் மாவட்டத் தலைவர்), சிவக்குமார் (கடலூர் மாவட்ட தலைவர்), ராஜேந்திரன், ஸ்ரீதர் திருஞானம், அறிவழகன், புதுச்சேரி மாநில திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் அபிமன்னன், சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

● தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் நாகராஜ், நிவேதா அவர்களுடைய மகள் கவி(1) பிறந்தநாள் விழா (20.08.2025) மேட்டூர் தங்கமாபுரிபட்டினத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கழகத் தலைவர் கலந்துகொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.



இதில் சேலம், மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூர், ஆர். எஸ், நங்கவள்ளி, இளம்பிள்ளை, கொங்கணாபுரம் பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் கலந்து கொண்டு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 19, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran